

# தி.மு.க. இளைஞர் அணி

# இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 05.04.2025 | தஞ்சாவூர் வடக்கு | கும்பகோணம் | சோழபுரம் கடைவீதி, கும்பகோணம் | **நாஞ்சில் சம்பத்,** மு.காவியா |
| 2 | 05.04.2025 | திருவாரூர் | நன்னிலம் | கலைஞர் அரங்கம், மஞ்சக்குடி | கம்பம் **செல்வேந்திரன்,** வீ.வேல்முருகன் |
| 3 | 05.04.2025 | கிருஷ்ணகிரி மேற்கு | வேப்பனஹள்ளி | சூளகிரி | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, சி.பவித்ரா |
| 4 | 05.04.2025 | திருச்சி வடக்கு | மண்ணச்சநல்லூர் | எதுமலை பிரிவு ரோடு | ராஜகம்பீரன் அப்பாஸ், ப.வெங்கடேஷ் |
| 5 | 05.04.2025 | திண்டுக்கல் கிழக்கு | திண்டுக்கல் | என்.ஜி.ஓ.காலனி, உழவர் சந்தை அருகில் | மதுரை எஸ்.பாலா, அ.சுஹாசினி |
| 6 | 06.04.2025 | திருச்சி வடக்கு | துறையூர் | வடக்குத் தெரு, நால் ரோடு, ந.குணசீலன் தெரு | முனைவர் **இரா.தி.சபாபதி மோகன்,** அ.சார்மதி |
| 7 | 06.04.2025 | கிருஷ்ணகிரி கிழக்கு | பர்கூர் | போச்சம்பள்ளி | **நாஞ்சில் சம்பத்,** கு.முரளிகிருஷ்ணன் |
| 8 | 06.04.2025 | திண்டுக்கல் கிழக்கு | நிலக்கோட்டை | மதுரை ரோடு, வத்தலகுண்டு | ராஜகம்பீரன் அப்பாஸ், துரை தினகரன் |
| 9 | 07.04.2025 | நாமக்கல் மேற்கு | குமாரபாளையம் | சேலம் சாலை, குமாரபாளையம் | **திருச்சி சிவா** எம்.பி., கா.பிரதீபா |
| 10 | 07.04.2025 | கன்னியாகுமரி கிழக்கு | நாகர்கோவில் | அறிஞர் அண்ணா விளையாட்டரங்கம் அருகில், வடசேரி | வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, ஜெ.ஜெபின் |
| 11 | 07.04.2025 | சென்னை வடக்கு | இராயபுரம் | பாலு முதலி தெரு, இராயபுரம் | பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், அ.தா.டெக்சின் ரொமேரியோ |
| 12 | 08.04.2025 | புதுக்கோட்டை வடக்கு | கந்தர்வக்கோட்டை | பேருந்து நிலையம் அருகில், கந்தர்வக்கோட்டை | தமிழ் கா.அமுதரசன், இ.நேரு |
| 13 | 11.04.2025 | கடலூர் கிழக்கு | கடலூர் | கடலூர் | **திருச்சி சிவா** எம்.பி., கு.அஷ்வின் |
| 14 | 12.04.2025 | நாமக்கல் மேற்கு | திருச்செங்கோடு | தேவனாங்குறிச்சி, திருச்செங்கோடு | பேராசிரியர் **சுப.வீரபாண்டியன்,** க.நந்தகுமார் |
| 15 | 12.04.2025 | கரூர் மாவட்டம் | குளித்தலை | தோகை மலை | செந்தில்வேல், வே.குணஸ்ரீ |
| 16 | 12.04.2025 | கள்ளக்குறிச்சி தெற்கு | கள்ளக்குறிச்சி | வானவரெட்டி ஊராட்சி | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, ஆ.ஷர்மிளா |
| 17 | 12.04.2025 | கள்ளக்குறிச்சி தெற்கு | ரிஷிவந்தியம் | மேல் சிறுவளூர் கூட்டுரோடு | மருத்துவர் ப.மீ.யாழினி, ச.ஐஸ்வர்யா |
| 18 | 19.04.2025 | கடலூர் கிழக்கு | புவனகிரி | கம்மாபுரம் | எழுத்தாளர் வே.மதிமாறன், ர.கோமதி |
| 19 | 20.04.2025 | கடலூர் கிழக்கு | குறிஞ்சிப்பாடி | குள்ளஞ்சாவடி | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, நா.சத்தியப்பிரியன் |
| 20 | 26.04.2025 | கடலூர் கிழக்கு | சிதம்பரம் | பரங்கிப்பேட்டை | **நாஞ்சில் சம்பத்,** க.செல்வமணி |
| 21 | 27.04.2025 | கடலூர் கிழக்கு | காட்டுமன்னார்கோயில் | திருமுட்டம் | வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, க.தமிழ்மணி |

அன்பகம், சென்னை – 18.
நாள் : 04–04–2025.

கலைஞர் 100
1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

## திருச்சியில் காமராசர் பெயரில் நூலகம் –

# சென்னையில் காரல் மார்க்சுக்குச் சிலை! முதலமைச்சரின் அறிவிப்பு பாராட்டத்தக்கது!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, ஏப். 5-

திருச்சியில் காமராசர் பெயரில் நூலகம் - தலைநகர் சென்னையில் காரல் மார்க்சுக்குச் சிலை அமைக்கப்படும் என்ற முதலமைச்சரின் அறிவிப்பு பாராட்டத்தக்கது என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் அறிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் (3.4.2025) தமிழ்நாடு சட்டப் பேரவையில் 'திராவிட மாடல்' ஆட்சியின் முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் (விதி 110-இன்கீழ்) வெளியிட்ட அறிக்கையில், பொருளாதார தத்துவ கர்த்தாவான காரல் மார்க்சுக்கு சென்னை தலை நகரில் சிலை எழுப்பப்படும் என்றுள்ள இனிய அறிவிப்பை வரவேற்றுப் பாராட்டி மகிழ்கிறோம்.

'திராவிட மாடல்' ஆட்சியின் சிறப்பம்சங்கள்!

நமது 'திராவிட மாடல்' ஆட்சி தத்துவத் தலை வர்களையும், தொண்டறச் செம்மல்களையும் வருகின்ற தலைமுறைகளுக்கு நினைவூட்டி, வரலாற்றில் பெருமைப்படுத்துவது மிகவும் சிறப்பான 'திராவிட மாடல்' ஆட்சியின் சிறப்பம்சங்களாகும்!

காரல் மார்க்ஸ்பற்றி வெகு மக்களிடையே தந்தை பெரியாரும், அவரது சுயமரியாதை இயக்கமும், அவர் நடத்திய 'குடி அரசு', 'விடுதலை' ஏடுகளும் அவரது விஞ்ஞான சோஷலிசத்தை மக்களுக்கு விளக்கியதோடு, பல குழந்தைகளுக்குக் காரல் மார்க்ஸ் என்றே பெயரிட்டதுண்டு; அவர்களுக்கு இப்போது 90 வயதும் ஆகின்றது.

எனவே, 'திராவிட மாடல்' ஆட்சியின் மாட்சியில், இது முக்கிய சாதனையாகும்!

பாராட்டி வரவேற்கவேண்டிய ஒன்று!

அதுபோலவே, திருச்சியில் 290 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவிருக்கும் நூலகத்திற்குக் கல்வி வள்ளல் காமராசர் பெயர் வைக்கப் படும் என்று அறிவிப்புத் தந்ததும் மிகவும் பாராட்டி வரவேற்க வேண்டிய ஒன்றாகும்!

நாளும் இப்படி சாதனைக்கு மேல் சாதனை செய்து, வரலாற்றில் பொன்னேடுகளைப் பெருக்கிக் கொண்டே போவதால், கொள்கை எதிரிகளோ பொறுத்துக் கொள்ள முடியாமல், வெட்டி அவதூறுச் சேற்றினை ஆதாரமின்றி வீசுகின்றனர்.

பெரியார் மண் அவர்களை நன்கு புரிந்தே வைக்கவேண்டிய இடத்தில் வைத்திருக்கிறது!

முதலமைச்சர் அவர்களுக்கு நமது பாராட்டுகள்!

இவ்வாறு அவர் அறிக்கை விடுத்துள்ளார்.




கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் காந்திமாநகர் பேருந்து நிலையம் அருகில் அமைக்கப்பட்டுள்ள நீர்மோர் பந்தலை, கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா. கார்த்திக் திறந்து வைத்தார். இளைஞர் அணி துணை அமைப்பாளர் க. மணிகண்டன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் அஞ்சுகம் பழனியப்பன், துரை செந்தமிழ்ச் செல்வன், தாமோதரன், குமார் இளைஞரணி அமைப்பாளர் இ.ரா.தனபால் துணை அமைப்பாளர்கள் திருமலைராஜா துரை பிரவீன் குமார் லாராபிரேம்தேவ் கோவை அருண் இப்னுமசூது சௌந்தரபாண்டியன், சரவணன், கவுன்சிலர்கள் மரியராஜ் மற்றும் தீபா தளபதி பட்டேல் உள்ளிட்ட இளைஞரணி நிர்வாகிகள் ,கழக நிர்வாகிகள், திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.